**செய்தி வெளியீடு எண்: 671** **நாள்: 15.09.2018**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் நாளை (16.09.2018) காலை 10 மணிக் கு சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அன்னாரது சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 29.6.2018 அன்று சட்டப்பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ''சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான மறைந்த மரியாதைக்குரிய திரு. இராமசாமி படையாட்சியார் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், அவரது பிறந்த தினமான செப்டம்பர் 16ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடப்படும்'' என்று அறிவித்தார்கள்.

மேலும், 19.7.2018 அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கும் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், ''மக்களுக்காக வாழ்ந்து மறைந்த ஒப்பற்ற தலைவர் இராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு, அவர் பிறந்த கடலூர் மாவட்டத்தில் முழுஉருவ வெண்கலச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம் அமைக்கப்படும்'' என அறிவித்தார்கள்.

கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பத்தில், இராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு 2 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 0.69.0 ஹெக்டேர் நிலத்தில், அமைக்கப்படவுள்ள முழுஉருவ வெண்கலச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபத்திற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் (14.09.2018) அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் நாளை (16.09.2018) காலை 10 மணிக்கு கிண்டி, ஹால்டா அருகில் உள்ள சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது சிலைக்கு அருகில் புகைப்படம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், வாரிய தலைவர்கள், கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், சீர்மிகு பொதுமக்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**